| 5 | துறைமுகத்தெருவில் வார்டு எண்.11, 12–ல் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 10.90 |
| 6 | ஆசாரிமார் கீழத்தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 7.26 |
| 7 | கார்மல் ஜோதி பள்ளி சாலையில் தார்த்தளம் அமைத்தல். | 4.62 |
| 8 | இக்பால் தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல்.. | 15.46 |
| 9 | துறைமுகத்தெருவில் வார்டு எண்.13, 14–ல் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 13.39 |
| 10 | நடுக்கள்ளியடைப்பு சாலையில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 5.98 |
| 11 | மாதாகாலனி தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 5.50 |
| 12 | இலப்பவிளை பள்ளி ரோட்டில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 5.18 |
| 13 | புல்லன்விளை தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 10.62 |
| 14 | துறைமுகத்தெரு எண். 1 –ல் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 10.00 |
| 15 | சீம்பிளிவிளைத் தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 7.38 |
| 16 | கிராம நிர்வாக அலுவலக சாலையில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 9.00 |
| 17 | பண்டாரவிளை, வலியவிளை தெருக்களில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 6.73 |
| 18 | தும்பக்காட்டுவிளை தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 5.91 |
| 19 | ஆண்டிப்பிள்ளைத் தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 5.44 |
| 20 | மாலவிளைத் தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 5.57 |
| 21 | ஆசாரிமார் மேலத்தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 8.17 |
| 22 | ஆசாத்நகர் சாலையிலிருந்து பள்ளி ரோடு சாலை வரை மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 10.13 |
| 23 | மரமடித் தெருவில் வார்டு எண்.8, 9–ல் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 8.63 |
| 24 | பந்தவிளைத் தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 9.07 |
| 25 | பழைய மார்க்கெட் சாலையிலிருந்து நரிக்கல் சாலை சந்திப்பு வரை மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார்த்தளம் அமைத்தல். | 7.00 |
| 26 | மொகைதீன்பள்ளித் தெருவில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல். | 9.25 |
| 27 | வடக்கு கள்ளியடைப்பு சாலையில் தார்த்தளம் அமை.த்தல். | 1.90 |
| 28 | சிஙகன்காவு குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 2.31 |
| 29 | பர்னட்டிவிளையிலிருந்து பாலத்தன்கரை வரை தார்த்தளம் | 5.45 |

| | | |
|---|---|---|
| | அமைத்தல். | |
| 30 | நரிக்கல் சாலை சந்திப்பிலிருந்து சிஙகன்காவு சாலை வரை தார்த்தளம் மற்.றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 16.70 |
| 31 | காமராஜர் சாலையில் தார்த்தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 17.85 |
| 32 | சிஙகன்காவு சாலையில் தார்த்தளம் அமைத்தல். | 12.75 |
| | **மொத்தம்** | **284.34** |

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2010 ஆகஸ்ட் திங்கள் 20.08.2010–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர் மன்றம்

<u>பொருள் எண் : 1</u>
<u>23.07.2010–ம் நாள் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.3 கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 07.07.2010 தேதிய அறிவுரையின்படி கொண்டு வரப்படும் தீர்மானம் :</u>

தனிநபர், வீடுகள், விடுதிகள், வணிக நிறுவனங்கள் இன்னும் பிறவற்றிலிருந்து வெளியாகும் திடக்கழிவுகள், நுகர்வோர் மற்றும் வணிகப் பொருட்களை கட்டுவதற்காக பயன்படுத்தப்படும் பொருட்களின் (Package) கழிவுகளை அறிவியல் பூர்வமாக மேலாண்மை செய்வது உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். மேலும், இக்கழிவுகள் உரிய முறையில் மேலாண்மை செய்யப்படாதபோது மோசமான சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகளை விளைவிக்கின்றன. இவற்றை கட்டுப்படுத்துவதற்காக இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, புதுடெல்லி அவர்களது அறிவிக்கை எண். எஸ்.ஓ. 908 (இ) நாள் 25.09.2000–ன்படி, நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) வதிகள் 2000 இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விதிகளின் அட்டவணை – II, வரிசை எண். 1 (3)–ன்படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவது தவிர்க்கும் பொறுப்புடையவராவார். அவர் உள்ளாட்சி அமைப்பினால் அறிவிக்கப்பட்ட பிரித்தல், சேமித்தல் மற்றும் சேகரித்தல் முறைக்கு இணஙக கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

இவற்றை செயல்படுத்தவும், நகரின் சாக்கடை திட்டம் தஙகு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மேற்பரப்பு நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுதலைத் தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கப்படவும் மேற்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு நகராட்சி திடக்கழிவுகளை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தனிநபர், வீடுகள், விடுதிகள், வணிக நிறுவனங்கள் இன்னும் பிற அனைவரும் தாஙகள் வெளியேற்றும் திடக்கழிவுகளை தரம் பிரித்தல் சேமித்தல், ஒப்படைத்தல் ஆகிய பொறுப்புகளை விதிமுறைகளின்படி கையாள கீழ்க்காணும் அறிவிப்புகள் செய்யப்படுகின்றன.

1. எந்த ஒரு தனி நபர் வீடுகள், விடுதிகள், வணிக நிறுவனங்கள் இன்னும் பிறர் யாரும் தாம் வெளியேற்றும் திடக்கழிவுகளை அதற்கென்று ஒதுக்கப்பட்ட குப்பை தொட்டிகள் அல்லது சுகாதார பணியாளர்களிடம் ஒப்படைப்பது தவிர திறந்த வெளிகளிலோ, அடுத்தவர் இடத்திலோ, பொது இடத்திலோ, சாக்கடையிலோ, பிற நீர் நிலைகளிலோ இன்னும் பிற இடஙகளில் போடுவதோ, தூக்கி எறிவதோ, சேமிப்பதோ, எரிப்பதோ அல்லது இன்னும் பிற வழிகளின் மூலம் வெளியேற்றுவதோ கூடாது.

2. மேலும் மக்கும் கழிவுகளை திறந்த வெளியிலோ, பொது இடஙகளிலோ, சொந்த மனையிலோ, சொந்த காலியிடத்திலோ அல்லது இன்னும் பிறவற்றில் உரிய சுகாதார பணியாளர்களிடம் ஒப்படைத்தல் அல்லது அறிவியல் பூர்வ உரமாக்குதல் தவிர வேறு எக்காரணத்தைக் கொண்டும் திடக்கழிவுகளை சேமித்து வைத்தல் கூடாது.

3. மேற்படி திடக்கழிவுகளான இலைச்சருகுகள், தோட்டக்கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள், பழைய துணிகள், தேய்ந்த டயர்கள் இன்னும் பிற திடக்கழிவுகள் எதுவும் திறந்த வெளிகளிலோ, வீட்டின் முற்றத்திலோ, பொது இடஙகளிலோ இன்னும் பிற இடஙகளிலோ எரித்தல் கூடாது.

4. நர்ஸிங ஹோம் மருத்துவ திடக்கழிவுகள் மற்றும் தொழிற்சாலை கழிவுகள் எக்காரணம் கொண்டும் திடக்கழிவுகளுடன் கலத்தல் கூடாது.

5. மேற்படி கழிவுகளிலுள்ள மறு சுழற்சிக்கு உகந்த கழிவுகளான பழைய காகிதஙகள், உலோகக் கழிவுகள், குறிப்பிட்ட பிளாஸ்டிக்ஸ் கழிவுகள் இன்னும் பிற கழிவுகளை தனியாக சேமித்து குறித்த நாட்களில் சுகாதாரப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

6. உரமாக்கும் அல்லது மக்கும் குப்பைகளான சமயலறை கழிவுகள், மீந்துபோன தின்பண்டஙகள், கசஙகிய காகிதஙகள், பயன்படுத்தப்பட்ட இலைகள், காய்ந்த சருகுகள், தோட்டக்கழிவுகள் இன்னும் பிறவற்றை தினமும் அவரவர் இடத்தில் உள்ளே அல்லது அவரவர் தெரு / வார்டில் அதற்கென குறிப்பிட்ட இடத்தின் உள்ளே, அல்லது குளச்சல் நகராட்சி சுகாதாரப் பணியாளர்களிடம் மொத்த உரக்கிடஙகிற்கு ஒப்படைப்பது தவிர பிற எதுவும் செய்தல் கூடாது.

7. அபாயகரமான மற்றும் தீஙகு விளைவிக்க கூடிய கழிவுகளான பயன்படுத்தப்பட்ட பேட்டரி செல்கள், காலாவதியான மருந்துகள், உடைந்த கண்ணாடி பொருட்கள், உடைந்த மின் விளக்குகள் இன்னும் பிறவற்றை தனியாக சேகரித்து ஒவ்வொரு ஜனவரி மற்றும் ஜுலை மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை அன்று மட்டும் குறிப்பிட்ட சுகாதார பணியாளர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

8. பள்ளம் அல்லது நிலம் நிரப்பவல்ல திடக்கழிவுகளான கட்டிட கழிவுகள், கட்டுமான கழிவுகள், மண் அல்லது மணல் கழிவுகள் இன்னும் பிற கழிவுகளை குளச்சல் நகராட்சி அனுமதித்த அல்லது அறிவித்த இடத்தில் அவரவர் சொந்த செலவில் ஒப்படைத்தல் வேண்டும்.

குளச்சல் நகராட்சி எல்கைக்குள் மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் எந்த ஒரு தனிநபர், வீடு, விடுதி, வணிக நிறுவனஙகள் மற்றும் பிற யாருக்கும் கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படுவதுடன் தொடர்ந்து விதிமுறை மீறல் செய்பவர் மீது குற்றவியல் நடைமுறை சட்டத்தின்கீழ் வழக்கு தொடர பரிந்துரைக்கப்படும்.

இத்தீர்மானம் 01.01.2011 முதல் அமுலுக்கு வருகிறது.

1. தனிநபர் / வீடு மீதான அபராதம்

1. முதல்முறை மீறுபவர் : ரூ. 100
2. இரண்டாவது முறை மீறுபவர் : ரூ. 500
3. மூன்றாம் முறை மீறுபவர் : ரூ. 1000 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் வழக்கு பரிந்துரை செய்ய பரிந்துரைத்தல்.

II. வணிக நிறுவனம் / தொழில் நிறுவனம் மற்றும் பிற நிறுவனஙகளின் மீதான அபராதம்

1. முதல்முறை மீறுபவர் : ரூ. 100
2. இரண்டாவது முறை மீறுபவர் : ரூ. 1000
3. மூன்றாம் முறை மீறுபவர் : ரூ. 10,000 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் வழக்கு பரிந்துரை செய்ய பரிந்துரைத்தல்.

வசூலிக்கப்படும் அபராதத் தொகை நகராட்சி பொது நிதிக் கணக்கில் வைக்கப்படும்.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.4596/09/எச்1)

**தீர்மானம் எண். 1449 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலக பணியாக வெளியூர் சென்ற பயணங்களுக்கான பயணப்படித் தொகை ரூ..9654/– ஐ கீழ்காணும் விவரங்களின்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.கே.யு.சிந்தாமதார் | மேலாளர் | 5/2010<br>6.2010<br>7/2010 | 718/–<br>628/–<br>2458/– |
| 2 | திருமதி. எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 6/2010<br>7/2010 | 902/–<br>1074/– |
| 3 | திருமதி. அ.நிர்மலா ஜாய் | இளநிலை உதவியாளர் | 6/2010<br>7/2010 | 594/–<br>138/– |
| 4 | திரு.ஆர்.சிவகுமார் | சமுதாய அமைப்பாளர் | 6/2010<br>7/2010 | 469/–<br>1968/– |
| 6 | திரு.ச. ராமு | அலுவலக உதவியாளர் | 7/2010 | 705/– |
| | | மொத்தம் | | 9654/– |

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.130/2010/எச்1)

**தீர்மானம் எண். 1450 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுரையின்படி கொண்டு வரப்படும் தீர்மானம்

இந்நகராட்சிப் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை மட்கும் கழிவுகளுடன் சேர்க்காமல் தனியே சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மறுசுழற்சிக்குட்படாத பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்துவதற்கு இம்மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக்ஸ் கழிவுகள் மற்றும் இந்நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக்ஸ் தவிர்ப்பு கண்காணிப்பு குழுவினரால் வணிக நிறுவனங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்ஸ் பொருட்கள் ஆகியவற்றை திருநெல்வேலி, இந்தியா சிமெண்ட் நிறுவனத்திற்கு ஊடு எரிபொருளாக பயன்படுத்த அனுப்பி வைக்க மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு இந்நகராட்சியில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை இலவசமாக திருநெல்வேலி, சஙகர் நகர், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு அனுப்பிடவும், அதற்கான வாகன எரிபொருள் செலவை நகராட்சியே ஏற்றுக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4596/09/எச்1)

**தீர்மானம் எண். 1451 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சிக்குட்பட்ட 5 இடஙகளில் ‘ குப்பை இல்லா குளச்சல் நகரம் ’ என்ற Flex விளம்பர பலகைகள் 3’ x 2’ அளவில் ரூ.16,250/– மதிப்பீட்டில் தயார் செய்து காஙகிரீட் அடித்தளம் அமைத்து நடுவதற்காக 23.07.2010–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி. சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர், குளச்சல் நகராட்சி | 7.69% மதிப்பீட்டை விடக் கூடுதல் |
| 2 | திரு.பி. தஙகமணி<br>ஒப்பந்ததாரர், குளச்சல் நகராட்சி | மதிப்பீட்டு விகிதம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் திரு.பி. தஙகமணி என்பவர் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.6536/08/எச்1)

**தீர்மானம் எண். 1452 குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.தங்கமணி என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙகுவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிப் பகுதியில் அலைந்து திரியும் நாய்கள் பொதுமக்களுக்கு பெரிதும் அச்சுறுத்தலாகவே உள்ளதால் அலைந்து திரியும் தெரு நாய்கள் மற்றும் வீட்டு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த கருத்தடை அறுவை சிகிட்சை செய்ய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை அரசாணை எண். 106 நாள் 10.06.2008–ன்படி நாய் ஒன்றுக்கு ரூ. 445/– என்ற கட்டணத்தில் நாய்களை பிடித்து கருத்தடை செய்ய அனுமதித்துள்ளது. மேற்படி செலவினத்தில் 50% இந்திய பிராணிகள் நலவாரியத்தில் இருந்து பெறப்படும், 50% நகராட்சி பொது நிதியிலிருந்தும் செலவு செய்யப்பட வேண்டும். இது தொடர்பான பிரேரணையை சென்னை பிராணிகள் நல வாரியத்திற்கு அனுப்பவும், தற்போது நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2868/09/எச்1)

**தீர்மானம் எண். 1453 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சியின் பொது சுகாதாரப் பணிகளுக்காக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய 15 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 3396/2005/அ4 நாள் 19.12.2005–ன்படி தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தனர். அதன் பின்னர் 02.06.2008 முதல் 10 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிய அனுமதிக்கப்பட்ட நிலையில் நகராட்சியின் தரம் முதல் நிலையாக உயர்த்தப்பட்டதாலும், இந்நகராட்சியில் தற்போது பணியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 48 பேரில் 22 பணியாளர்கள் தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வினியோகம், தகவல் மையப் பணி, ஓட்டுநர் பணி, அலுவலக காவலர் பணி மற்றும் அலுவலக இருக்கை பணிகளில் மாற்றுப் பணியாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், சுனாமி பாதிக்கப்பட்ட இந்நகராட்சி பகுதிகளில் முழுமையான சுகாதாரப் பணிகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதாலும், மாவட்ட ஆட்சியரின் மேற்குறிப்பிடப்பட்ட செயல்முறை ஆணையின்படி நவம்பர் 2009 முதல் கூடுதலாக 5 துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து சுகாதாரப் பணிகளை மேற்கொண்டிட இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1025 நாள்15.10.2009–மூலம் ஒப்புதல் வழஙகியுள்ளது. எனவே நவம்பர் 2009 முதல் பிப்ரவரி 2010 வரை 15 தினக்கூலி துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் நகராட்சியின் பொது நிதிநிலை திருப்திகரமாக இல்லாத காரணத்தாலும், 16.09.2007 முதல் 28.02.2010 வரையிலான காலஙகளுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழஙகியதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பின்னேற்பு பெற வேண்டியிருந்ததாலும், தணிக்கைத் தடை எழக்கூடிய நிலையினை கருத்தில் கொண்டு 3/2010 முதல் 10 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட்டு 7/2010 வரை பணிபுரிந்து வந்தனர்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் (Zero Waste Management Scheme) பூஜ்ய கழிவு மேலாண்மைத் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதால், குளச்சல் நகரை முழுமையான குப்பைத் தொட்டி இல்லா நகரமாக உருவாக்கிடவும், Hot spot உருவாகுவதை தவிர்க்கும் பொருட்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் குப்பை சேகரிப்பதற்கு ஏதுவாக சுகாதார பணியாளர்களின் சேவையை கருத்தில் கொண்டு தற்போது பணிபுரிந்து வரும் 10 தினக்கூலி துப்புரவு பணியாளர்களுடன் கூடுதலாக 5 துப்புரவு பணியாளர்களை பணியமர்த்திட இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1303 நாள் 24.05.2010 –ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 8/2010 முதல் கூடுதலாக 5 துப்புரவு பணியாளர்கள் சுகாதாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ1/11092/10 நாள் 25.06.2010 –ன்படி 2010–2011–ம் ஆண்டிற்கான நாள் ஊதியம் ரூ. 130/–ல் இருந்து ரூ.200/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி 15 துப்புரவு பணியாளர்களுக்கு ஊதியம் வழஙக இந்நகராட்சி பொது நிதிநிலை திருப்திகரமாக இல்லாததாலும், 16.09.2007 முதல் 31.07.2010 வரையிலான காலஙகளுக்கு பொது நிதியிலிருந்து ஊதியம் வழஙகப்பட்டுள்ளதற்கு நகராட்சி நிர்வாக

இயக்குநரின் பின்னேற்பு பெற வேண்டியுள்ளதாலும், தணிக்கையில் தடை எழக்கூடும் என்பதாலும் 31.08.2010 உடன் இப்பணி இடங்களை முடித்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.2764/05/எச்1)

**தீர்மானம் எண். 1454 –** 15 தினக்கூலி வேலையாட்களின் ( துப்புரவு பணியாளர்களின் இன்றியமையாயைப் பற்றி பொருளில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவாறான தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 15 நபர்களை கைவிடும் பட்சத்தில் 'குப்பைத் தொட்டியில்லா குளச்சல் நகர' திட்டம் முழுமையாகப் பாதிப்படைவதுடன், நகரின் சுகாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதால் இன்னும் மூன்று மாதக் காலத்திற்கு மேற்குறிப்பிட்ட 15 தினக்கூலி அடிப்படையிலான துப்புரவு பணியாளர்களின் பணியிடஙகளை நீட்டித்துக் கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் மினி லாறி ஓட்டுனர் இரண்டு பணியிடஙகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.28384/08/ஜே3 நாள் 11.02.2010 –ல் வழஙகப்பட்ட அனுமதி 30.09.2010–ல் முடிவடைவதால் மேலும் 01.10.2010 முதல் 30.09.2011 முடிய ஓராண்டு நீட்டித்து வைத்துக் கொள்ளவும், பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : சுனாமியால் பாதிக்கப்பட்ட குளச்சல் நகருக்கு நகரின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு பொது சுகாதாரப் பணிகளுக்கு இப்பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2010 முதல் மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து வைத்துக் கொள்ள மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.1203/94/சி1)

**தீர்மானம் எண். 1455அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி TN.74.5507–ன் இன்சூரன்ஸ் 15.06.2010 வுடன் காலாவதியாகி விட்டதால் மேற்படி வாகனத்தின் இன்சூரன்ஸ் புதுப்பிப்பதற்காக ரூ.6210/–ஐ செலுத்தக் கேட்டு ஓரியண்ட்ஸ் இன்சூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திடமிருந்து 12.05.2010–ல் கடிதம் வரப்பெற்றது. மேற்படி வாகனத்தை Condemn செய்வதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததால் அப்போது இன்சூரன்ஸ் புதுப்பிக்கப்படவில்லை. தற்போது மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்து மீண்டும் இயஙக முடிவு செய்யப்பட்டுள்ளதால் அதன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக இன்சூரன்ஸ் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே ரூ. 6210/– ஐ ஓரியண்ட்ஸ் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

( ந.க.எண்.7219/08/எச்1 )

**தீர்மானம் எண். 1456 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயஙகி வந்த மினி லாறி TN.74.5507–ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.34,500/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1354, நாள் 20.06.2010–ன் மூலம் ஏற்கெனவே ஒப்புதல் வழஙகியுள்ளது. அதன் அடிப்படையில் 27.07.2010–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு :

| | | |
|---|---|---|
| 1 | KSSS .ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில். | 2.24% மதிப்பீட்டை விட அதிகம். |
| 2 | M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | 0.28% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது. பொது சுகாதாரப் பணியில் மேற்படி மினி லாறியின் அவசியத்தை கருத்தில் கொண்டு, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று குறைந்த

ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.
2) பொது சுகாதாரப் பணியில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழஙகியதையும் மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.7219/09/எச்1)

**தீர்மானம் எண். 1457 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயஙகி வந்த மினி லாறி TN.74.Z 2339–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை ரூ.4950/– மதிப்பீட்டில் சரி செய்வதற்காக, அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 26.07.2010 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புதுக்குடியிருப்பு, நாகர்கோவில் | 9.89% மதிப்பீட்டை விட கூடுதல்<br>(ரூ.5440.00) |
| 2 | **KSSS** .ஆட்டோமொபைல்ஸ்,<br>ஆசாரிப்பள்ளம் ரோடு, நாகர்கோவில். | 6.87% மதிப்பீட்டை விட கூடுதல்<br>(ரூ.5280.00) |
| 3 | M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ்,<br>ஒழுகினசேரி, நாகர்கோவில். | மதிப்பீட்டு விலை விகிதம்.<br>(ரூ.4950.00) |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவானது. நகரின் சுகாதாரப் பணியில் மேற்படி மினி லாறியின் அவசியத்தை கருத்தில் கொண்டு, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 29.07.2010 அன்று M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

1) உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 4950/–க்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

2) நகரின் சுகாதாரப் பணியில் மேற்படி மினி லாறியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டு விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்துள்ள M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழஙகியதற்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.4008/10/எச்1)

**தீர்மானம் எண். 1458 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 14888/2010/UPA-3 நாள் 14.07.2010–ன்படி பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (SJSRY ) 2010-2011 –ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பிரிவுகள் | தொகை |
|---|---|---|
| 1 | USEP - சுய வேலை வாய்ப்பு திட்டம் – தனிநபர் மானியம் | 1,29,825/– |
| 2 | UNEP - மகளிர் சுய உதவிக்குழு – சுய உதவித் திட்டம் (குழுக்கடன்) | 97,369/– |
| 3 | UNSP . - மகளிர் சுய உதவிக்குழு – சுழல் நிதி RF | 32,456/– |
| 4 | STEP UP - பயிற்சி வேலை மேம்பாட்டிற்கான திறன் வளர்ச்சி | 1,94,758/– |
| 5 | UWEP - சுய வேலை வாய்ப்பு | 1,58,845/– |
| 6 | UCON - சமுதாய மேம்பாட்டுக் கூட்டமைப்பு | 64,913/– |
| 7 | A & OE - நிர்வாக மற்றும் அலுவலக செலவினஙகள் | 35,280/– |

| | | |
|---|---|---|
| 8 | I.E.C - தகவல், கல்வி மற்றும் தொடர்பு | 21,168/— |
| | மொத்தம் | 7,34,595/— |

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் நெறிமுறைகளின்படி மேற்கண்ட அலகுகளுக்கான செலவீனங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4463/10/எச்2)

**தீர்மானம் எண். 1459 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

இந்நகராட்சியில் மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் அன்றாடம் மின்னஞ்சல் மூலம் அறிக்கைகள் பெறப்பட்டும், அனுப்பப்பட்டும் வருகிறது. மேலும் இ—டெண்டர் மூலம் டெண்டர்கள் விடப்படுவதால் டெண்டர் பதிவேற்றம் மற்றும் டெண்டர் பதிவிறக்கம் செய்ய ஏற்கெனவே இருக்கும் அகன்ற அலைவரிசை (BSNL) மூலம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் அடிக்கடி தாமதமும், தடையும் ஏற்படுவதால் குறிப்பிட்ட சமயத்தில் டெண்டர் மற்றும் மின்னஞ்சல் பதிவிறக்கம் செய்வது தடையாகிறது. எனவே கூடுதலாக Wireless modem ஒன்று (அகன்ற அலை வரிசை ) பெற Tower signal மற்றும் Net work coverage நன்றாக உள்ள Reliance internet data card இணைப்பு பெறுவதற்கான உத்தேச செலவு ரூ. 2500/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1460 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சிறப்பு அவசரக்கூட்டம் 2010 ஆகஸ்ட் திங்கள் 30.08.2010–ம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர் மன்றம்

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட 33 சாலைகள் இயற்கை இடர்பாடுகளால் மிகவும் சேதமடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளபடியால் 2010–2011–ம் ஆண்டிற்கான சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ் பணிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 252.87 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு முன்னுரிமை வரிசைப்படி பணிகளை செயல்படுத்திட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வாய்க்கால் பிரதான சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 9.12 |
| 2 | குளச்சல் கடை தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.60 |
| 3 | சன்னதி தெரு முதல் எம்.ஜி.ஆர். சாலை வரை சிமெண்ட் தளம் அமைத்தல் | 7.50 |
| 4 | வெள்ளியாகுளம் சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 8.25 |
| 5 | வார்டு எண்.11 மற்றும் 12 – துறைமுகத்தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.90 |
| 6 | ஆசாரிமார் கீழத்தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 4.65 |
| 7 | கார்மல் ஜோதி பள்ளிச் சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.97 |
| 8 | இக்பால் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.20 |
| 9 | வார்டு எண்.13 மற்றும் 14 – துறைமுகத்தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 13.39 |
| 10 | நடுக்கள்ளியடைப்பு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 8.91 |
| 11 | மாதாகாலனி தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.80 |
| 12 | இலப்பவிளை பள்ளி சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 3.91 |
| 13 | புல்லன்விளை சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 12.38 |
| 14 | துறைமுகத்தெரு எண். 1 –ல் (சர்ச் தெரு) சிமெண்ட் தளம் அமைத்தல். | 7.60 |
| 15 | சீம்பிளிவிளைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.95 |
| 16 | கிராம நிர்வாக அலுவலக சாலையில் தார்த்தளம் அமைத்தல். | 1.15 |
| 17 | பண்டாரவிளை மற்றும் வலியவிளை தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.55 |
| 18 | தும்பக்காட்டுவிளை தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.90 |

| | | |
|---|---|---|
| 19 | ஆண்டிப்பிள்ளைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 7.00 |
| 20 | மாலவிளைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.85 |
| 21 | ஆசாரிமார் மேலத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 14.95 |
| 22 | ஆசாத்நகர் முதல் பள்ளிச் சாலை வரை சிமெண்ட் தளம் அமைத்தல். | 6.90 |
| 23 | வார்டு எண். 8 மற்றும் 9 –ல்– மரமடி தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 8.60 |
| 24 | பந்தவிளைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 8.20 |
| 25 | பழைய மார்க்கெட் தெரு முதல் நரிக்கல் தெரு சந்திப்பு வரை தார்த்தளம் அமைத்தல். | 6.90 |
| 26 | மொகைதீன்பள்ளித் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 6.19 |
| 27 | வடக்கு கள்ளியடைப்பு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.30 |
| 28 | சிஙகன்காவு குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.34 |
| 29 | பர்னட்டிவிளை சாலை முதல் பாலத்தன்கரை சாலை வரை தார்த்தளம் அமைத்தல். | 5.80 |
| 30 | நரிக்கல் சாலை சந்திப்பு முதல் சிஙகன்காவு சாலை வரை தார்த்தளம் அமைத்தல். | 10.45 |
| 31 | காமராஜர் சாலையில் தார்த்தளம் அமைத்தல். | 12.33 |
| 32 | சிஙகன்காவு சாலையில் தார்த்தளம் அமைத்தல். | 13.10 |
| 33 | நெசவாளர் தெற்கு வீதியில் தார்த்தளம் அமைத்தல். | 2.23 |
| | **மொத்தம்** | **252.87** |

அலுவலகக்குறிப்பு :

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.25910/2010/இ3 நாள் 06.08.2010 வழிகாட்டு நெறிமுறைகளின்படி (Guide lines)தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1448 நாள் 20.08.2010 –ம் தேதிய தீர்மானத்தின்படி அனுமதி வழஙகிய பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.25910/2010/இ3 நாள் 19.08.2010–ம் தேதிய கூடுதல் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி (Additional guide lines) தயாரிக்கப்பட்டுள்ள திருத்திய மதிப்பீடுகளுக்கும் மேற்கண்ட வரிசைப்படி முன்னுரிமை அடிப்படையில் பணிகளை செயல்படுத்திட மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1461 அலுவலகக் குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி